# 23-05-2024 செய்தி

## ஓபிசி பட்டியலில் இருந்து பல பிரிவினர் நீக்கம்

- சேவைகள் மற்றும் பதவிகளில் காலியிடங்கள் இட ஒதுக்கீடு சட்டம் 2012-ன் கீழ் மேற்கு வங்க பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் தவிர) சான்றிதழ் பெற்றவர்களின் ஓபிசி அந்தஸ்து ரத்து செய்யப்படுவதாக கொல்கத்தா உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- 2010-ம் ஆண்டு மார்ச் 5-ம் தேதியிலிருந்து 2012-ம் ஆண்டு மே 11-ம் தேதி வரையிலான காலகட்டத்தில் 42 பிரிவினர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (ஓபிசி) சேர்க்கப்பட்டுள்ளனர்.
- சேவைகள் மற்றும் பதவிகளில் காலியிடங்கள் இட ஒதுக்கீடு சட்டம், 2012-ன் கீழ் மேற்கு வங்க பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் தவிர) சான்றிதழ் இவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.
- அந்தப் பிரிவுகளில் பல பிரிவுகள் ரத்து செய்யப்படுகின்றன. ஆனால், 2010-ம் ஆண்டுக்கு முன்பாக 66 ஓபிசி வகுப்பினரை வகைப்படுத்தும் மாநில அரசின் நிர்வாக உத்தரவுகளில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை. ஏனெனில் அவற்றுக்கு எதிராக வழக்கு தொடரப்படவில்லை.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையச் சட்டம், 1993-ன் கீழ், பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் கருத்தும் ஆலோசனையும் மாநில சட்டமற்றத்தைக் கட்டுப்படுத்தும்.
- மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, தேசிய ஆணையத்துடன் கலந்தாலோசித்து, புதிய வகுப்புகளைச் சேர்ப்பது அல்லது மீதமுள்ள வகுப்பினரை ஓபிசிகளின் மாநிலப் பட்டியலில் சேர்ப்பது குறித்த பரிந்துரைகளுடன் சட்டமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## மத்திய அரசுக்கு ரிசர்வ் வங்கி ரூ. 2.11 லட்சம் கோடி டிவிடெண்ட்

**உபரி நிதி**

- "இந்திய பொருளாதாரம் சிறப்பாக செயல்பட்டு வருவதால் 2023-24 நிதி ஆண்டுக்கான சிஆர்பி ஒதுக்கீட்டை 6.50 சதவீதமாக உயர்த்த ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர் குழு முடிவு செய்துள்ளது.
- இதன்படி, மத்திய அரசுக்கு ரூ.2.11 லட்சம் கோடி உபரி நிதியை வழங்க இயக்குநர் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது".
- மத்திய அரசு எதிர்பார்த்த டிவிடெண்டை விட இது அதிகம் ஆகும். சிஆர்பி என்பது அவசர காலத்தில் நிலைமையை சமாளிப்பதெற்கென்று ஒதுக்கப்படும் நிதி ஆகும்.
- ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சதவிகிதத்தில் ரிசர்வ் வங்கி இந்த அவசரகால ஆபத்து தணிப்பு (சிஆர்பி) நிதியை பராமரிக்கும்.
- அந்த நிதி ஆண்டு முடிந்த பிறகு உபரியாக இருக்கும் நிதியை மத்திய அரசுக்கு வழங்கும். இது உபரி நிதி அல்லது டிவிடெண்ட் என்று அழைக்கப்படுகிறது.

**சிஆர்பி உயர்வு**

- 2018-19 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் ரிசர்வ் வங்கியின் சிஆர்பி 5.50 சதவீதமாக இருந்தது.
- 2022-23 நிதி ஆண்டில் பொருளாதாரம் மேம்படத் தொடங்கிய நிலையில் சிஆர்பி 6 சதவீதமாக உயர்த்தப்பட்டது.
- இந்நிலையில் தற்போது அது 6.50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 7 நாடுகளுடன் இந்தியா பரஸ்பர ஒப்பந்தம்

- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்துக்கும் (சிபிஐசி) ரஷ்ய பெடரல் சுங்க சேவைக்கும் இடையே அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார ஆப்ரேட்டர் (ஏஇஓ) தொடர்பாக பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் கையெழுத்தானது.
- சிபிஐசி மற்றும் ரஷ்யாவின் பெடரல் சுங்க சேவையுடன் ஏஇஓ பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பது இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு உதவியாக அமையும்.
- இது இந்தியா மேற்கொள்ளும் 7-வது பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் ஆகும்.
- ஏற்கெனவே தென்கொரியா ஐக்கிய அரபு அமீரகம், ஹாங்காக் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.